24th January 1961]

(இ) அப்படியானல், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The letter has been sent to the Special Officer, North Arcot District Board for such action as may be necessary.

SRI S. M. ANNAMALAI: *இது சுமார் இரண்டு மூன்று ஆண்டுகளாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றம் களம்பூரில் உயர் நிலைப்பள்ளி கட்டடம் கட்டவேண்டுமென்று கோரி சர்க்கார் பரிசிலனையில் இருக்கிறது. இதை உடனடியாக பரிசீலனை செய்து கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *ஒவ்வொரு அங்கத்தினரும் தாங்கள் இருக்கும் இடத்தில் கட்டடம் கட்டவேண்டும் என்பது முடியாத காரியம். கனம் அங்கத்தினர் ஒரு கடிதம் எழுதியதற்காகவே அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றில்லை.*

Higher Grade Teachers

***122 *Q.*—SRI S. M. ANNAMALAI :** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1960-ல் எத்தனை ஹையர் கிரேடு ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளிலிருந்தும், ஜில்லா போர்டு பள்ளிகளிலிருந்தும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் ?

(இ) அவர்களில், எத்தனை பேர்களுக்குத் திரும்ப வேலை தரப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) One hundred and eleven from Aided Schools; none from District Board Schools.

(இ) For fifty-six teachers.

SRI S. M. ANNAMALAI : *மீதம் உள்ள 56 ஆசிரியர்களுக்கு மறுபடியும் வேலை தேடித்தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *கேள்விக்கு பதில் தயாரிக்கும் காலத்திலே இந்த புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டது. இப்போது அவர்களுக்கு வேலை கிடைத்திருக்குமென்று நம்புகிறேன்.*

Waste lands

***Q.*—SRI V. K. KOTHANDARAMAN :** *கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஐந்து எக்கரா சொத்து நிலத்திற்கு பட்டாதாரர்களாக இருப்பவர்களின் பேரில், எத்தனை எக்கரா சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் பட்டா செய்யப்பட்டுள்ளது ?